# கொழும்புப் பல்கலைக்கழகம் இலங்கை
# சட்ட பீடம்

# சட்டமாணிக் கற்கைநெறி (LL.B) 2022

## <u>சட்ட இளங்கலை மாணவர்களுக்கான விபரங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழிகாட்டி</u>
## <u>வருட இறுதி நேரடி (திறந்த புத்தகப்) பரீட்சைகள்</u>

இவ் வழிகாட்டியில் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் வழிமுறைகளானவை பல்கலைக்கழகத்தின் பரீட்சைக் கையேடு மற்றும் 2020ம் ஆண்டின் கல்விச் செயற்பாடுகள் (சிறப்பு ஏற்பாடுகள்) துணைவிதிகள் என்பனவற்றுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும். இவ் வழிகாட்டிக்கும் துணைவிதிகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படின் துணைச்சட்டங்களானவை மேலோங்கும்.

சட்டபீடத்தின் நேரடித் திறந்த புத்தகப் பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் அனைத்து சட்டமாணி மாணவர்களும் குறித்த இவ்வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் வழிமுறைகளை வாசித்து விளங்கிக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதனைக் கவனத்தில் கொள்ளவும். ஏதேனும் வினாக்கள் அல்லது விளக்கங்கள் இருப்பின் சட்டபீடத்தின் சிரேஸ்ட உதவிப்பதிவாளர் அல்லது பரீட்சை ஒருங்கிணைப்பாளரைத் தொடர்புகொள்ளவும்.

### (அ) பரீட்சைமுறை மற்றும் ஒழுங்கமைப்பு

i. வருட இறுதிப்பரீட்சையானது **திறந்த நூல் எழுத்து மூலப் பரீட்சையாக** (Written and open-book examination) இருக்கும். இது **நேரடியாக நடாத்தப்படும்**. பரீட்சையானது **கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டபீட பரீட்சை மண்டபத்தில்** நடைபெறும்.

ii. பரீட்சாத்திகள் முன்று (03) மணித்தியாலங்களில் ஆறு (06) வினாக்களில் மூன்று (03) வினாக்களிற்கு விடையளிக்குமாறு வேண்டப்படுவர்.

iii. பரீட்சையில் எந்தவினாவும் கட்டாய வினாவாக அமையாது.

### (ஆ) புள்ளிகள்

i. குறித்த பரீட்சைக்கு மொத்தம் 70% புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.(மிகுதி 30% மானது 1997 ம் ஆண்டின் 5ம் இலக்கதுணைவிதிகளின் பிரகாரம் இரு ஒப்படைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது).

**(இ) கால அளவு**

1. ஒவ்வொரு பரீட்சையும் **காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 12.00 மணிக்கு** நிறைவுபெறும். ஒவ்வொரு பரீட்சையின் மொத்த நேரமும் மூன்று (03) மணித்தியாலங்களாகும்.

**(ஈ) பரீட்சைக்கு முந்திய முன்னேற்பாடுகள்**

1. பரீட்சையின்போது தொடர்புடைய வள ஆவணங்களின் வன்பிரதிகள் (hard copies) அல்லது மென்பிரதிகளை (soft copies) நீங்கள் பயன்படுத்த முடியும் இருப்பினும் அவற்றினைப் பயன்படுத்துவது கட்டாயமானதொன்றல்ல.
2. பரீட்சை நேரத்தின் போது மென்பிரதிகள் (soft copies) வடிவிலிருக்கும் வள ஆவணங்கள் எதையேனும் நீங்கள் பார்க்க விரும்பின், தேவையான ஆவணங்கள் மற்றும் வளங்களை LMS இல் இருந்து பதிவிறக்கம் (download) செய்து அவற்றை உங்களது மடிக்கணனி அல்லது தரவு இறக்கி (data drive) யில் நேரடித் திறந்த புத்தகப் பரீட்சைக்காகச் சேமித்துள்ளதனைத் (saved) தயவுசெய்து உறுதிப்படுத்தவும்.
3. உங்களது மடிக்கணனியைக் கொண்டுவர விரும்பின், உங்களிடம் ஏதேனும் இருப்பின், பரீட்சைக்கு முன்னராக உங்களால் சேமிக்கப்பட்ட மென்பிரதி ஆவணத்தினை (soft document) அணுகுவதற்கு இணைய இணைப்பு அற்ற மடிக்கணனியைக் கொண்டுவருவதனை உறுதிசெய்யவும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கைபேசி (Cell) அல்லது திறன்பேசிகள் (Smart phones) மற்றும் இணைய சாதனங்கள் (Internet Devices) அனுமதிக்கப்படமாட்டாது என்பதனை நினைவில் கொள்ளவும்
5. பரீட்சையின் போது இணைய அணுகல் (internet access) அனுமதிக்கப்பட மாட்டாது என்பதனை நினைவில் கொள்ளவும்.

**(உ) பரீட்சை முறைகேடுகள்**

1. பரீட்சை முறைகேடுகள் தொடர்பான அனைத்து விதிகளும் நேரடித் திறந்த புத்தகப் பரீட்சைக்கு ஏற்புடையதாகும். பரீட்சாத்திகளுக்கு இதன்மூலம் குறிப்பாகப் பின்வரும் விதிகள் நினைவுபடுத்தப்படுகின்றது.
   - பரீட்சைமண்டபத்தில் இணையத்தினைப் (Internet) பயன்படுத்துவதனைத் தவிர்க்கவும்
   - உங்களது விடையினை எழுதுவதற்கு எவ்வித முறையிலான உதவியையும் பெறுவதயோ அல்லது இன்னொரு பரீட்சாத்திக்கு உதவி புரிவதயோ தவிர்க்கவும்.
   - விடைகளை screenshots எடுப்பது, அவற்றை வேறுநபருடன் பரிமாற்றம் செய்வது அல்லது கேள்விகள் மற்றும்/ அல்லது பதில்களை வேறு

எந்த ஊடகத்தின் மூலமாகவும் Copy and Paste பண்ணுவது என்பவற்றைத் தவிர்கவும்.

- பரீட்சை விடயப்பரப்புத் தொடர்பான தெளிவுபடுத்தலுக்காக எந்தவொரு கோரிக்கையையும் இடுகையிடுவதனைத் தவிர்க்கவும்.
- எந்த வடிவத்திலான பிரதிபண்ணலும் பரீட்சைக் குற்றமொன்றாகும்.

2. ஏதாவது பரீட்சை முறைகேட்டுக்குக் குற்றவாளியாக இணங்காணப்படும் எந்தவொரு பரீட்சாத்திக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தயவுசெய்து கவனத்திலெடுக்கவும்.

******************